**தலைப்பு 263 – ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 263 - ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஏப்ரல் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இவ்வறிக்கையின் பந்தியுடன் தொடர்பு |
|---|---|---|
| 3.5(அ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3.5(அ),(ஈ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துத் தொகுதிகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,751,725,957 | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரச கணக்குத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த SA 82 அறிக்கை வழுக்களுடன் | நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், வித்தியாசங்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | தொகை எனினும், முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளில் இறுதி மீதி ரூபா 5,761,155,640 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 14,990,570,317 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | சமரப்பிக்கப்பட்டிருந்தமையால் அது தொடர்பாக அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. சரியான SA 82 அறிக்கை கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | திறைசேரி கணினி பதிவுகள் - SA 82 படிவத்தின் படி மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்கள் கொள்வனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 53,582,845 தொகையாக காணப்பட்டதுடன் செலவுக் கூற்று – ACA2(ii) படிவத்தின் படி ரூபா 91,368,443 தொகையாக காணப்பட்டமையால் இயந்திரகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு மற்றும் கட்டிட நிர்மாண வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 37,785,598 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குத் திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரச கணக்குத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த SA 82 அறிக்கை வழுக்களுடன் சமரப்பிக்கப்பட்டிருந்தமையால் அது தொடர்பாக அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. சரியான SA 82 அறிக்கை கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | திறைசேரி கணினி அச்சுப் பதிவு SA 82 படிவத்தின் படி மீளாய்வாண்டின் காணிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 1,179,634,089 தொகை எனினும், அட்டவணையின் படி ரூபா 395,667,268 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 783,966,821 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குத் திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த SA 82 அறிக்கை வழுக்களுடன் சமரப்பிக்கப்பட்டிருந்தமையால் அது தொடர்பாக அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. சரியான SA 82 அறிக்கை கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) கணக்காய்வுகளுக்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி கணினி அச்சுப் பதிவு - SA 82 படிவத்தின் படி மீளாய்வாண்டின் போது மூன்று | அரச கணக்குத் திணைக்களம் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அட்டவணைகள் |

| | | |
|---|---|---|
| சொத்து விடயங்களின் ஆரம்ப மீதிகளுக்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 27,813,137 தொகை மற்றும் நான்கு விடயங்களில் அகற்றல் என காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 78,345,349 இற்கான மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அந்த மீதிகளை கணக்காய்வின் போது சான்றுறுதி செய்வதற்கு முடியாதுள்ளது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்த SA 82 அறிக்கை வழுக்களுடன் சமரப்பிக்கப்பட்டிருந்தமையால் அது தொடர்பாக அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. சரியான SA 82 அறிக்கை கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94(i) இன் படி வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலே அன்றி ஏதேனும் திணைக்களம் ஒன்றினால் வேலையொன்று அல்லது சேவையொன்று அல்லது வழங்கலொன்றிற்கான ஏதேனும் செலவொன்று அல்லது பொறுப்பொன்றிற்கு அல்லது பணம் செலுத்தும் கடப்பாடொன்றிற்கு ஈடுபாட்டுப் பொறுப்பு ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது. அதற்கு முரணாக மாவட்ட செயலகத்தினால் 03 செலவு விடயங்கள் தொடர்பாக மீதியான ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 9,021,580 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | 2022 திசெம்பர் மாதம் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதி பில் பத்திரத்திற்காக ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் மற்றும் 2023 ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டமையால் 2022 ஆண்டிற்கான பொறுப்புகள் என காட்டப்பட்டது. | நிதிப் பிரமாணம் 94(i) ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்காக ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது. |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஜனவரி 11 திகதிய 19/0549/101/030 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சிறு மற்றும் மத்திய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் சலுகை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 06 மாத சலுகைக் காலத்தின் பின்னர் திருப்பிச் செலுத்துவதற்காக 10 தரப்பினருக்கு வழங்கியிருந்த ரூபா 38,000,000 இற்கான கடன் தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 22,638,517 தொகை நிலுவையாக காணப்பட்டது. | 2023.03.31 திகதி அளவில் இந்த மீதியில் ரூபா 913,590 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி குறிப்பிட்ட காலத்தினுள் கடன் தொகையை திருப்ப அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது செயற்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் சங்க 137 வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,669,586 இற்கான மீதியொன்று செயற்படாது காணப்பட்டது. 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம சக்தி மக்கள் சங்கங்கள் 10 இனால் சுழல்கடன் முறைமையின் அடிப்படையில் வழங்கியிருந்த ரூபா 4,161,148 இற்கான கடன் தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,620,937 இற்கான கடன் தவணை மற்றும் ரூபா 280,881 இற்கான வட்டியுடன் கூட்டுத்தொகை ரூபா 1,901,818 தொகையொன்று அறவிடப்பட்ட வேண்டிக் காணப்பட்டது. | கிராம சக்திச் சங்கங்களின் மறுசீரமைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், சங்கங்கள் இடையே நிதியம் தொடர்பாக காணப்படும் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சிலிருந்து கிடைக்கக்கூடிய அறிவுரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வங்கி கணக்குகளில் காணப்படும் பணம் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை மகளிர் பணிமனை சுழல் கடன் மற்றும் குடும்பத் தலைவிக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் 2011 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை கடன் வழங்கியிருந்த 121 பேரிடம் ரூபா 594,700 இற்கான தொகையும் மற்றும் சூரியவெவ பிரதேச செயலகத்தினால் 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கடன் வழங்கியிருந்த 11 கடன் பெறுவோரிடம் ரூபா 59,000 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. | கொவிட் - 19 நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணத்தினால் கடன் அறவீடு குறைவடைந்திருந்ததுடன், நிலுவை கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைக் கடன் தொகையை தாமதம் இன்றி அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயன்தரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொண்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வாண்டொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அடுத்த ஆண்டு முதல் அதன்படி செயற்படுவேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. | | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>நிதிப் பிரமாணம் 137(5), 138(3),(5),(6) மற்றும் 139(5) | 29,606,858 | 2022/2023 பெரும்போக சூழல் நேய உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உரம் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினை உறுதிப்படுத்துவதற்கான இன்வொயிஸ் பத்திரங்கள் மற்றும் களஞ்சிய பெறுவனவு அறிவித்தல்கள் கொடுப்பனவு உறுதிச் சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 137(5), 138(3),(5),(6) மற்றும் 139(5) இற்கு முரணாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செலவுகளை அங்கீகரித்தல், சான்றுபடுத்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ள வேண்டும். |

### 2.5 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான ஜீப் வண்டியொன்று 2022 ஒக்தோபர் 06 கணக்காய்வுத் திகதியிலுள்ளவாறு மைலோமீற்றரில் பதிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கையை விட 10,708 கிலோ மீற்றர் கூடுதலாக ஓட்ட அட்டவணைகள் உட்படுத்தப்பட்டு ஓட்டம் மேற்கொள்ளப்படாத தூரத்திற்காக ரூபா 179,447 தொகைக்கான கிலோ மீற்றருக்காக 1427 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தென அவதானிக்கப்பட்டது. | மைலோ மீற்றர் சரி செய்யப்பட்ட பின்னர் காணப்படும் பெறுமதியில் இருந்து ஓட்ட அட்டவணைகள் நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | எரிபொருள் வழங்குதல், அவற்றை ஓட்ட அட்டவணையில் பதிவு செய்தல் மற்றும் எரிபொருளை சமப்படுத்துதல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 215(3), திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 நவம்பர் 03 திகதிய 06/2020 இலக்கம் கொண்ட திறைசேரி செயற்பாட்டு வழிகாட்டலின் 02 ஆம் பந்தி மற்றும் 2020 ஒக்தோபர் 14 திகதிய திறைசேரி செயற்பாட்டு வழிகாட்டல் இலக்கம் 06 இன் பந்தி 2.4 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி ரூபா 29,606,858 இற்கான பெறுமதிக்கு 02 காசோலைகள் எழுதப்பட்டு பணம் பெறுவோருக்கு ஒப்படைக்காமல், கையில் தடுத்து வைத்து அந்த இரண்டு காசோலைகளும் பணம் பெறுபவர் ''மாவட்ட செயலாளர்'' என மீண்டும் திருத்தி 2023 பெப்ரவரி மாதம் மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்த உறுதிச் சீட்டுக்களில் குறைபாடுகள் காணப்பட்டமையால் குறைபாடுகளை சரி செய்து அனுப்பும் படி உறுதிச் சீட்டுக்கள் மாவட்ட உரச் செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், உரம் வழங்குவதற்கு உரிய வழிகாட்டல் விதி முறைகளுக்கு இணக்கமின்றிய சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டமையால் அந்தக் காசோலைகளை இரத்துச் செய்து பொது வைப்புக் கணக்கில் தற்காலிகமாக தடுத்து வைத்து குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 2023 பெப்ரவரி மாதம் பணம் செலுத்தப்பட்டது. | நிதிப் பிரமாணம் 215(3) பிரகாரம் மற்றும் சுற்றறிக்கை அறிவுரைகளின் படி அண்மித்த கொடுப்பனவுகளுக்காக ஏற்பாடுகள் தடுத்து வைக்கக் கூடாது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் ஓகிட் மற்றும் அந்தூரியம் பயிர்ச்செய்கை செயற்திட்டத்திற்காக ரூபா 4,235,417 தொகையும், மாசி மற்றும் கருவாடு உற்பத்திச் | அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் ஓகிட் மற்றும் அந்தூரியம் பயிரச்செய்கைகளுக்காக உரம் பெற்றுக்கொள்வதில் சிரமம் மற்றும் நாட்டில் காணப்பட்ட கடின | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக ரூபா 4,298,220 தொகையும், சூரியவெவ பிரதேச செயலகத்தினால் அலங்கார மீன் இனப்பெருக்கம் மற்றும் வளர்ப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 2,704,350 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நேர் மற்றும் மறை தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்துதல், உற்பத்திக் கிரயத்தினை குறைத்தல் ஆகிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை எனவும், உற்பத்தியாளர்களுக்கு நிரந்தர சந்தை ஒன்று மற்றும் விலை ஒன்று பெற்றுக்கொள்ளல், வறுமையிருந்து விடுவித்தல், நலன் பெறும் குடும்பங்களுக்கு சிறந்த வாழ்க்கை நிலைமையினை பெற்றுக்கொள்ளல் ஆகிய நலன்கள் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி, மீன் மற்றும் எரிபொருள் விலை அதிகரித்தல், நேரடியாக தாக்கியிருந்ததென அறிவிக்கின்றேன். சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவில் பொருளாதார நெருக்கடி காரணமாக அடிக்கடி செயற்திட்டங்களில் இருந்து அங்கத்தவர்கள் விலகுதல் மற்றும் நாட்டில் காணப்பட்ட கடின பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி காரணமாக தற்போது செயற்படாத மட்டத்தில் காணப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 ஆண்டின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பெலியத்த பிரதேச செயலகம் காடை கோழி வளர்ப்பு செயற் திட்டத்திற்காக ரூபா 1,630,581 தொகையும், வீரக்கெட்டிய பிரதேச செயலகம் கோழி வளர்ப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 7,309,635 தொகையும், செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட 07 மாத காலப் பகுதியினுள் நலன் பெறுவோருக்கு வழங்கப்பட்டிருந்த காடைக் கோழிகளில் சுமார் 3.5 சதவீதம் மற்றும் கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்து 10 மாதக் காலப் பகுதிக்குள் சுமார் 18 சதவீதம் மாத்திரம் மீதியாகக் காணப்பட்டதுடன், செயற்திட்டங்கள் தோல்வியடைந்திருந்தது. | காடைக் கோழிகளுக்கு வைரஸ் நோயொன்று ஏற்பட்டிருக்காவிடின் செயற்திட்டம் வெற்றியடைந்திருக்கும். மிருக உணவுகள் மற்றும் மருந்து வகைகளின் விலை விரைவாக அதிகரித்தமையாலும், மருந்து வகைகளை பெற்றுக்கொள்ள முடியாமையால் கோழிக் குஞ்சுகள் இறந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டவாறு மற்றும் எதிர்பார்த்த குறிக்கோளை நெருங்கக் கூடியவாறு ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் காளான் சார்ந்த உற்பத்தி செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த ரூபா 984,692 தொகைக்கான உபகரணங்கள் ஒரு வருடத்தை விட மிகையான காலம் விளைவற்று காணப்பட்டது. | காளான் சார்ந்த உற்பத்தி தொடர்பாக நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் உற்பத்திக் கிரயம் அதிகரித்த காரணத்தினால் விற்பனை செய்ய முடியாமையால் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. | வழங்கயிருந்த பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.2 உள்நாட்டு நிதியங்களின் மூலம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதன் கீழ் சூரியவெவ பிரதேச செயலகத்தினால் அந்தரவெவ தர்மதூத நீர்ச் செயற்திட்டத்தின் குளத்தின் அருகே பம்பு நிலையத்திலிருந்து உஸ்கல நீர்த் தொட்டி முறைமை வரை புதிய நீர்க் குழாய் விரிப்பதற்காக நீர்க் குழாய்கள் வழங்குவதற்கு ரூபா 1,950,798 தொகை செலவிடப்பட்டிருந்தது. கொடுப்பனவு அறிக்கையின் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் காட்டப்பட்டுள்ள பீ.வீ.சீ. குழாய்கள் வழங்கி விரிப்பதற்காக 96 மீற்றர்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பீ.வீ.சீ. பீஎன்டீ 11 வகையைச் சேர்ந்த குழாய்களுக்கு பதிலாக 7 வகையான குழாய்கள் பயன்படுத்திய காரணத்தினால் ரூபா 114,897 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கடிதத்தின் படி மேலதிக கொடுப்பனவொன்று ஏற்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 156(i) இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | கிராமீய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2022 ஆண்டின் களிச் செங்கல் கைத்தொழிலில் ஈடுபடும் 16 பேருக்கு ரூபா 389,000 | வேலையை பூர்த்தி செய்யும் படியும் அவ்வாறு பூர்த்தி செய்யாத நலன் பெறுவோரிடம் | நிதியங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன், செயற்திட்டத்தின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பெறுமதியான கூரைத் தகடுகள் மற்றும் செங்கல் உற்பத்தி செய்யும் குறைந்த வருமானமுடைய 50 பேர்களுக்கு ரூபா 970,000 தொகை பெறுமதியான கூரைத் தகடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 18 நலன் பெறுவோருக்கு வழங்கியிருந்த கூரைத் தகடுகள், கொட்டில்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நலன்களை மீண்டும் அறவீடு செய்யும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் படி ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தினால் ரூபா 9,859,653 தொகைக்கான பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையான உடன்படிக்கையொன்று கையொப்பமிட்டு பண்டங்கள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) படி உடன்படிக்கைகளுக்கு அணுகவேண்டும். |
| (ஆ) | அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் ஓகிட் பயிர்ச் செய்கையை மேம்படுத்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 8,486,250 தொகையிற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகை அலுவல்கள் தாமதமடைந்த காரணத்தினால் ரூபா 2,635,000 தொகை பெறுமதியான கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு முடியாமல் போயிருந்தது. அதன் காரணமாக செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6,052,762 தொகைக்கான ஏனைய செலவுகள் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோளுக்காக பயன்படுத்த முடியாமல் போனது. | 2021 ஜுலை 12 திகதி ஓகிட் கன்றுகள் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டு ஒக்தோபர் 11 திகதி கட்டளைகள் அனுப்பப்பட்ட போதிலும் கன்றுகள் கொள்வனவு செய்ய முடியாமல் போனது. | செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டவாறு மற்றும் எதிர்பார்த்த குறிக்கோள்களை நெருங்கக்கூடிய விதமாக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாற்றப்பட்டு செல்லும் போது பொருட் பதிவேட்டுப் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு ஒப்படைக்காமல் பெலியத்த பிரதேச செயலகத்தின் மூன்று டெப் கணினிகள், பிரதேச செயலாளர் ஒருவர் மற்றும் கணக்காளர் இருவருக்கு டிஜிடல் கமரா ஒன்று மற்றும் மெமெரி காட் ஒன்று, முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒருவரும் எடுத்துச் சென்றிருந்ததுடன், 01 – 04 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தை மிகைத்திருந்த போதிலும் அந்தச் சொத்துக்களை மீண்டும் பெற்றுகொண்டிருக்கவில்லை. | திருப்பி ஒப்படைக்கும் படி 2023 ஜனவரி மாதத்தில் அறிவிக்கப்பட்டது. | பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 104(4) பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்ட நாள் முதல் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான கால வீச்சில் 05 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த ரூபா 123,187 தொகைக்கான விபத்துக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக கணக்காய்வு திகதியாகிய 2023 மார்ச் 14 திகதி அளவிலும் முழுமையான அறிக்கை வழங்கியிருக்கவில்லை. | மீண்டும் தகவல்களை பரிசோதனை செய்து சமர்ப்பிப்பதாக அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 10 வருடங்களுக்கு மிகையான காலப் பகுதியில் 02 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 248,245 தொகைக்கான 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமானம் 104(1) படி நடவடிக்கை | மீண்டும் தகவல்களை பரிசோதனை செய்து சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | 2022 ஒக்தோபர் 10 திகதி மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான கப் வண்டியொன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் தகவல்களை பரிசோதனை செய்து சமர்ப்பிப்பதாக அறிவிக்கின்றேன். | விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2013 ஜுலை 31 திகதி ஜீப் வண்டியொன்றுக்கு மற்றும் 2015 ஒக்தோபர் 12 திகதி கப் வண்டியொன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக முறையே ரூபா 56,747 தொகை மற்றும் ரூபா 12,750 தொகை விடய எழுதுவிளைஞரிடம் அறவீடு செய்வதற்காக வழங்கியிருந்த பரிந்துரை மற்றும் 2018 ஜனவரி 08 திகதி வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக இறுதி அறிக்கை மூலம் வழங்கியிருந்த பரிந்துரை 2023 மார்ச் 14 திகதி அளவிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட விடய எழுதுவிளைஞரினால் 2021.10.28 திகதி சமர்ப்பித்திருந்த மேன்முறையீட்டில் உள்ள விடயங்களை கவனத்தில் எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், 2018.01.08 திகதிய விபத்து தொடர்பாக காப்புறுதி உள்ளடக்கமொன்று காணப்படாமையால் நட்டத்தை உரிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | இறுதியறிக்கையின் மூலம் வழங்கியிருந்த பரிந்துரையின் படி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 பிரதேச செயலகங்களினால் 31 ஓய்வூதியம் பெறுவோருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,912,834 இற்கான ஓய்வூதியம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கின்றேன். | மிகைக் கொடுப்பனவு தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### பொதுமக்களுக்கு சேவை வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் 2014 ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த 40 கொடுப்பனவுப் பத்திரங்கள் மற்றும் 57 அனுமதிப்பத்திரங்கள் 2023 ஜனவரி 18 திகதி அளவிலும் குறிப்பிட்ட கொடுப்பனவு பத்திர / அனுமதிப்பத்திரம் பெறுவோருக்கு ஒப்படைக்கப்படாமல் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுப் பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரம் விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. | கொடுப்பனவுப் பத்திரங்கள் தாமதமின்றி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |